IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.

DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO. 42/2024

Deposition of witness for prosecution : PW3

Defense :

Name : மணி

Father's Name : சண்முகம்

Village : சைதாப்பேட்டை

Taluk : ஆரணி

Caste :

Calling : தறி வேலை

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.01.2025.

**முதல் விசாரணை**

**1. எதிரி ஆஜர்.**

2. நான் நெம்பர் 3A சீத்தாராமன் தெரு சைதாப்பேட்டை ஆரணியில் குடியிருந்து வருகிறேன். தறி வேலை செய்து வருகிறேன். அ.சா.2 குமரேசனை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியிடம் நான் சீட்டு கட்டி வந்தேன் அந்த வகையில் அவரை எனக்கு தெரியும். எதிரி பூங்காவனத்தை அடித்து விட்டது சம்மந்தமான வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 20.03.2021 அன்று மாலை 04.30 முதல் 5.00 மணிக்குள் நானும் குமரேசன் என்பவரும் ஆரணி முனிசிபாலிட்டி அலுவலகம் அருகில் வந்துகொண்டிருந்த போது சண்டை நடந்தது. போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள்.

3. போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட வந்திருந்தார்கள். போலீசார் நடந்த சம்பவம் குறித்து எழுதி கொண்டு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்தார்கள். என்னுடன் குமரேசன் என்பவரும் கையெழுத்து செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. போலீசார் சம்பவ இடத்தில் இருந்து ஒரு உருட்டு கட்டை எடுத்தார்கள். என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 உருட்டு கட்டை சம்பவ இடத்தில் இருந்தது தான். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். என்னுடன் குமரேசன் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தார். கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. சம்பவ தினத்தன்று நான் வேறு ஒரு வேலையாக ஆரணிக்கு வந்தேன். சம்பவ இடத்திற்கு நானும் அ.சா2 குமரேசன் ஒன்றாக வந்தோம். சம்பவ இடத்திற்கு வருவதற்கு முன்பு வரை அங்கு நடந்த சம்பவம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு வந்த பிறகு தான் சம்பவம் பற்றி தெரிந்து கொண்டேன். அ.சா.2 குமரேசனுக்கும் சம்பவ இடத்திற்கு வரும் வரையில் சம்பவம் பற்றி தெரியாது என்றால் சரிதான்.

2. சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்த போது நாங்கள் அங்கு தான் இருந்தோம். சம்பவ இடத்தில் நாங்கள் சென்ற போது உருட்டு கட்டை அங்கு தான் இருந்தது. அவ்வாறு அங்கு இருந்த உருட்டு கட்டை வரைபடத்தில் காட்டப்பட்டதா என்றால் தெரியாது நான் அதை கவனிக்கவில்லை. சம்பவத்தின் போது உருட்டு கட்டையால் யார் யாரை அடித்தார்கள் என்பது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பாகவே போலீசார் உருட்டு கட்டையை சம்பவ இடத்திற்கு எடுத்து வந்து போட்டு விட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3. சம்பவ இடத்தில் அடித்த நபர் அங்கு இருந்த உருட்டு கட்டையால் தான் அடித்தேன் என்றும் அதேபோல் அடி வாங்கிய நபர் அந்த உருட்டு கட்டையால் தான் அடி வாங்கினேன் என்றும் நேரடியாக அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான்.

4. எதிரி எனக்கு சீட்டு பாக்கி தரவேண்டும் என்பதற்காக எதிரிமீது இந்த பொய்யான வழக்கு பதிவு செய்திருந்தார்கள் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு சீட்டு பாக்கி தர வேண்டும் என்பதற்காக நானே முன்வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.